

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.2.2025) சென்னையில் நடைபெற்ற, கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., – அக்சயா சத்ராஸ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22–2–2025) நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா. அக்சயா சத்ராஸ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு. மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன். மற்றும் மணமக்கள் வீட்டார் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# ஓராண்டிற்கு காலை உணவு வழங்கும் திட்டம்! 3-வது நாள்!

### கொளத்தூர் 65–வது வார்டில் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!





சென்னை, பிப்.23 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழகதலைவர் முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்கும் சிறப்புமிகு திட்டத்தின் மூன்றாம் நாள். கொளத்தூர் மேற்கு பகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 2ஆம் நாளான நேற்று 22.2.20251) கொளத்தூர் மேற்கு பகுதி, மண்டலம்6, வார்டு65அ, டாக்டர் அம்பேத்கார் நகர், கொளத்தூர். மற்றும் 2) கொளத்தூர் மேற்கு பகுதி, மண்டலம்6, வார்டு65, பகவதி அம்மன் கோயில் தெரு, கொளத்தூர் ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொதுமக்கள் மற்றும் சிறுவர்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி. ஆர்.பிரியா ராஜன், பகுதி செயலாளர் ஏ.நாகராஜன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், தாவூத் பீ, ராஜன், ஸ்ரீதணி, சாரதா மற்றும் இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்காலை உணவு திட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் என்.பவுல்ராஜ். என்.சௌந்தர் ஆகியோர் நன்றி கூறினார்கள்.





காஞ்சிபுரம் மாநகராட்சியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி பகுதி கழகம் 2 சார்பில் மாமன்ற உறுப்பினர் வ. கமலக்கண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., கம்பம் செல்வேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் , சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் சி.கே.வி தமிழ்ச்செல்வன், சன் பிராண்டு கே. ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் எஸ்.சந்துரு, மாநகர நிர்வாகிகள் கே.ஏ. செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்து செல்வம், வ. ஜெகநாதன், கே.சுப்பராயன், வட்ட செயலாளர் சுகுமாரன் உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர் கலந்து கொண்டனர்.

